# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**02.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 02.10.2022
   - அக்டோபர் 2 **காந்திஜி மற்றும் சாஸ்திரி ஜி** அவர்களின் பிறந்தநாளில் நாடு அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறது.

## மத்திய செய்திகள்

1. 5G சேவை புதிய சகாப்தம்
   - தில்லியில் நடைபெற்ற இந்திய கைபேசி மாநாட்டில் 5G சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
   - முதல் கட்டமாக **டெல்லி, சென்னை, மும்பை, கொல்கத்தா, லக்னோ, பூனே, காந்திநகர், குருகிராம், ஹைதராபாத், பெங்களூர், சண்டிகர், அகமதாபாத், ஜாம் நகர்** ஆகிய 13 நகரங்களில் பயிற்சி சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
   - **எண்ம இந்தியா**:
     - மத்திய அரசின் **'எண்ம டிஜிட்டல் இந்தியா '** திட்டமானது கருவிகளின் விலை, இணைய தொடர்பு, இணைய சேவை கட்டணம், எண்ம சேவைகள் ஆகிய நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டது.
     - நாட்டை வளர்ச்சி அடைய செய்வதும் மக்களுக்கு தொழில்நுட்ப வசதிகளை கொண்டு சேர்ப்பதும் எண்ம இந்தியா திட்டத்தின் முக்கிய நோக்கம்.
     - உலகிலேயே இந்தியாவில் தான் இணைய சேவைக்கான கட்டணம் குறைவாக உள்ளது.
     - **2014இல் 1 ஜிபி** இணைய சேவை **ரூபாய் 100** ஆக இருந்த நிலையில் தற்போது அதன் கட்டணம் ரூபாய் பத்தாக குறைந்துள்ளது.
     - நாட்டில் ஒவ்வொருவரும் சராசரியாக மாதத்திற்கு **14 ஜிபி** இணைய சேவையை பயன்படுத்துகின்றனர்.
     - அதன் காரணமாக அவர்களின் செலவு **ரூபாய் 4200-ல்** இருந்து **ரூபாய் 150** ஆக குறைந்துள்ளது.

2. மத்திய பிரதேசத்தின் இந்தூர் நாட்டில் தூய்மையான நகரம்
   - மத்திய அரசின் **வருடாந்திர தூய்மை** மதிப்பீட்டில் நாட்டின் மிக தூய்மையான நகரத்துக்கான விருது மத்திய பிரதேசத்தின் **இந்தூர் நகருக்கு** வழங்கப்பட்டது.
   - ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான நகரமாக மத்திய பிரதேசத்தின் இந்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது.

- தொடர்ந்து **ஆறாவது** முறையாக இந்த ஊருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த ஊரின் மக்கள் தொகை சுமார் **35 லட்சம்** ஆகும்.
- ஆசியாவின் மிகப்பெரிய உயிரி இயற்கை எரிவாயு இந்த ஊரில் உள்ளது.
- நகரில் 850 வாகனங்கள் மூலம் சேர்க்கப்படும் கழிவுகள் இந்த ஆலையில் எரிக்கப்பட்டு பெறப்படும் **உயிரி இயற்கை எரிவாயுவால்** நகரின் அரசு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- மேலும் இயற்கை எரிவாயு விற்பனை உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் இந்தூர் மாநகராட்சி கடந்த ஆண்டு **ரூபாய் 14.45 கோடி** வருவாய் ஈட்டியது.
- தூய்மையான நகரங்கள் பிரிவில் இரண்டாவது இடத்தை குஜராத்தில் **உள்ள சூரத்தில்** தக்க வைத்துக் கொண்டது.
- **மகாராஷ்டிர மாநிலம், நவி மும்பை மூன்றாவது** இடம் பிடித்தது.
- ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட தூய்மையான கங்கை நகரங்கள் பிரிவால் பிரிவில் **உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்துவார் முதலிடம்** பிடித்தது.
- அந்த பிரிவில் **உத்தர பிரதேச மாநிலம் வாரணாசி இரண்டாவது இடத்தையும், உத்தரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷ் மூன்றாவது** இடத்தையும் பிடித்தன.

### 3. தமிழகத்திற்கு ரூபாய் 3500 கோடி வட்டி இல்லா கடன் விடுவிப்பு

- தமிழகத்தின் பல்வேறு மூலதன செலவினங்களுக்கு மத்திய அரசு ரூபாய் 3500 கோடியை வட்டி இல்லா கடனாக விடுவித்துள்ளதாக தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.
- கடைசியாக **ஜிஎஸ்டி கூட்டம் சண்டிகரில்** நடைபெற்றது.
- இதன் அடுத்த கூட்டம் ஆகஸ்டில் மதுரையில் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- கடந்த நிதிநிலை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் மூலதன முதலீடாக **50 ஆண்டுகளுக்கு ரூபாய் ஒரு லட்சம் கோடி** வட்டி இல்லா கடனாக அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இந்த சிறப்பு நிதி உதவிக்கு தமிழக அரசு ஏற்கனவே விண்ணப்பித்திருந்த நிலையில் ரூபாய் 3500 கோடி வட்டி இல்லா கடனை தமிழகத்திற்கு மத்திய அரசு விடுவித்து இருக்கிறது.
- பல ஆண்டுகளுக்கு முன்பு **'நெப்பர்'** என்கிற தேசிய மருந்தியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரையில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டும் அதற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்படாமல் இருந்தது.
- இதற்கு பதிலாக **'நைமர்'** என்கிற தேசிய மருத்துவ சாதன ஆராய்ச்சி நிறுவனத்தை மதுரைக்கு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.
- எய்ம்ஸ் நிறுவனமும் மதுரைக்கு வர இருப்பதால் **ஹெச்சிஎல் ஹனிலென் போன்ற மருத்துவ பொறியியல் நிறுவனங்கள்** மதுரையில் ஆய்வுகளை மேற்கொள்கின்ற நிலையில் 'நைமர்' மதுரையில் அமைந்தால் சிறப்பாக

இருக்கும் என்றார் பழனிவேல் தியாகராஜன்.

### 4. மகாத்மா காந்தி பிறந்த நாள்

- ஐநா சபையில் மகாத்மா காந்தி பிறந்த நாள், **சர்வதேச அகிம்சை தினமாக** கொண்டாடப்பட்டது.
- அதையொட்டி நடந்த நிகழ்ச்சியில் மகாத்மா காந்தியின் **'ஹோலோகிராம்'** வடிவ சிறப்பு தோற்றம் இடம்பெற்றது.
- இந்த கொண்டாட்டத்தின் போது ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி **ருசித்ரா கம்போஜ்**, யுனெஸ்கோ அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மகாத்மா காந்தி கல்வி நிறுவனம் சார்பில் ஒரு குழு விவாதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- **மகாத்மா சிறப்பு தோற்றம்**:
  - அப்போது ஒரு சிறப்பு நிகழ்வாக மகாத்மா காந்தி 'ஹோலோகிராம்' வடிவத்தில் **(முப்பரிமாண படிமம்)** தோன்றி பேசும் சிறப்பு நிகழ்வு காட்டப்பட்டது.
  - இந்த பேச்சில் கல்வி பற்றி மகாத்மா காந்தியின் சிந்தனை குரல் வழியாய் வெளிப்பட்டது.